# உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான வாழ்வாதார அபிவிருத்தி: மட்டக்களப்பை மையப்படுத்திய ஓர் ஆய்வு 2023

கந்தசாமி சத்தியசேகர்

# Post Civil War Livelihood Development Based on Batticaloa, 2023

Kandasamy Sathiyasegar
*Lecturer in Sociology & Anthropology*
*Department Of Social Sciences, Faculty of Arts and Culture*
*Eastern University, Sri Lanka.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையின், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு சமூக பொருளாதார மற்றும் அரசியல்ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இதற்கு கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமும்,அதன் விளைவுகளும் முக்கிய பங்கு வகித்துள்ளன.2009ல் யுத்தம் முடிவுக்கு வந்தது,ஆய்வுப் பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான மக்களின் வாழ்வியல் நிலைமைகளையும், பிரச்சினைகளையும், வாழ்வாதார அபிவிருத்தியையும் வாழ்வாதார அபிவிருத்திக்கு தடையாகவுள்ள அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளையும் கண்டறிதலை நோக்கமாகக் கொண்டு, பண்புரீதியான முறைமையியலினடிப்படையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இடப்பெயர்வு, வறுமை, வேலையின்மை, குறையுழைப்பு, பொருளாதார பற்றாக்குறை, சமுதாய ஏற்றத்தாழ்வுகள், போதைப்பொருள் பாவனைதற்கொலை, பாலியல் துஸ்பிரயோகம், களவு, கொலை, கொள்ளை,குடும்பச் சிதைவு, கைவிடப்பட்ட சிறுவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள், இடப்பெயர்வு, குடியகல்வு, பிரதேச முரண்பாடுகள், கடத்தல்கள், இலஞ்சம் அதிகரித்தல், இளங்குற்றவாளிகள் அதிகரித்தல், வதிவிடமின்மை, உளநல வீழ்ச்சி, விபத்துக்களில் உயிரிழப்புக்கள் அதிகரிப்பும் உடல் ஊனமுறுதலும்,கல்வி, சுகாதாரம் குறைவாக காணப்படுதல், பாடசாலை இடைவிலகல், சிறுவர்தொழிலாளர் அதிகரிப்பு, நுண்கடன் பிரச்சினைகள், முதியோர் புறக்கணிப்புக்கள், போன்ற பல பிரச்சினைகளும் யுத்தத்தின் பின் அதகரித்துள்ளதனை ஆய்வின் மூலம் அறியமுடிந்தது.*

**திறவுச்சொற்கள்:** *யுத்தம், வாழ்வாதாரம், அபிவிருத்தி*

**Abstracts**

*Batticaloa, situated in the Eastern part of Sri Lanka, has grappled with multifaceted challenges across social, economic, political, and cultural spheres, predominantly stemming from the protracted civil war that spanned for decades. The repercussions of the conflict have left a lasting impact on households, necessitating adaptations to a progressively deteriorating economic landscape and the abrupt shocks of political violence (Korf and Silva, 2003). Although the civil war officially concluded in 2009, pockets of the population, particularly in Batticaloa, continue to grapple with inadequate living standards, unmet basic necessities, and persistent development issues. This research delves into the aftermath of the civil war, exploring the lingering challenges faced by communities in Batticaloa and their broader implications on the nation's overall well-being. The study reveals that the end of the conflict did not uniformly translate into an improvement in living standards; rather, it brought about a decline in various aspects of*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

*socio-economic, political, cultural, and livelihoods development. A critical examination of the affected population exposes a spectrum of issues, including but not limited to poor health and education, high dropout rates, displacement, unemployment, economic instability, drug trafficking, sexual abuses, suicides, robberies, bribes, family separation, and the disproportionate impact on women and children. Furthermore, the research sheds light on the rise in accidental deaths, an increase in child labour, and the mounting burden of micro-credit obligations on the affected population. This paper aims to contribute to the existing body of knowledge by providing a comprehensive analysis of the post-conflict scenario in Batticaloa, identifying the persistent challenges faced by its inhabitants, and offering insights into potential strategies for sustainable recovery and development. Through a nuanced understanding of the ongoing issues, policymakers, NGOs, and other stakeholders can develop targeted interventions to address the multifaceted needs of the affected population and foster resilience in the region.*

**Keywords:** *Civil war, Livelihood, Development*

**ஆய்வு அறிமுகம்**

உலக நாடுகளில் இன்று பல்வகை சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதிலும் முக்கியமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேதான் அதிகளவில் சமூகப் பிரச்சினைகள் உருவாகியும் கூர்மையாக்கப்பட்டுமுள்ளன. அந்த வகையில் இலங்கையும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. இச்சமூகத்தில் குறிப்பிட்டு கூறக்கூடிய பிரச்சினைகளில் முக்கியமானதொரு விடயமாக காணப்படுவது உள்நாட்டு யுத்தமும் அதன் விளைவுகளுமாகும்.மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் நேரடியாக வடகிழக்கு பகுதிகள்பாதிக்கப்பட்டது.2009ஆம் ஆண்டு முடிவுபெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து,சுமார் 14 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும், மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வாதார அபிவிருத்தியும் குறைவான நிலையிலுள்ளது. இதனால் இடம்பெற்றிருக்கக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள், அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ளமாற்றங்கள், தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அறியவேண்டியிருந்தது.

சிறுபான்மையினர், அரசியல்பலமற்றோர், வறுமையானோர், கல்வியில் குறைந்தோர், கிராமத்து வாழ்க்கைமுறைக்குட்பட்டோர், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு குறைந்தோர், சிறந்த சமூகத்தலைமைத்துவம் குறைந்தோர், இயற்கை, பௌதீக, வளங்களை குறைவாகக்கொன்டோர், விசேடதேவையுடையோர், பெண்கள், சிறுவர்கள் போன்ற பலரும் மிகவும் இலகுவில் தாக்கப்பட்டு பாதிப்புக்களுக்கும், சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உட்படக்கூடியவர்கள் என்கின்ற காட்சிநிலைமைதொடர்ந்தவண்ணமே உள்ளன. பல் இன, மொழி, சமய, பண்பாட்டு மக்களையுடைய நாட்டில் இருக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகளின் தன்மையும் அவை செயற்படுத்தப்படும் விதமும் முரண்பாடுகள் தோன்ற காரணமாகின்றன. இதனால் இன, மத, அடையாளத்துவம் சார்ந்த அரசியல் காரணங்களால் சமுதாயத்தினருடைய வாழ்வியல் அம்சங்களும், வாழ்வாதார அபிவிருத்தியும்UN HABITAT (2016)வாழ்க்கைத்தரமும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.

குறிப்பாக சிறுபான்மையினர்களான தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் வேறுபட்டவையாகவுள்ளன. அவர்களுக்கான தேவைகள் பல இன்னும் முறையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. ஒரு சமுதாயம் அபிவிருத்தி அடைவதற்கும் முன்னோக்கி நகர்வதற்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படுவதுடன், வாழ்வாதார விருத்தியும் உறுதுணையாக அமைவது அவசியமானதாகும். பொருளாதாரவபிவிருத்தி, வாழ்வாதாரவபிவிருத்தி அணுகுமுறைகளைகருத்திற்கொண்டு ஒரு சமூகத்தின் அபிவிருத்தியை அளவிட வேண்டும் என்பதற்கிணங்க யுத்தத்திற்குப் பின்னரான சமூகப்பிரச்சினைகளும், வாழ்வாதார அபிவிருத்தியும் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின், கிழக்கு மாகாணத்தின்மட்டக்களப்பை மையப்படுத்தியதாகஇவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



© 2023, IRJTSR 

**நூலாய்வு(Litriture Review)**

ஆய்வினை சிறப்பான முறையில் செல்வதற்கும், எண்ணக்கரு சட்டகமொன்றை(Conceptual frame work) உருவாக்குவதற்கும், ஆய்வு நோக்கத்தை தெளிவாக்கவும், ஆய்வுவினாக்களை வடிவமைக்கவும், ஆய்வுக்கான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இலக்கிய மீளாய்வு மிகவும் அவசியமாகின்றது (சின்னத்தம்பி.க, 2007).இவ்வாய்வுக்கு தேவையான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், மற்றும் ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப்பிரதேச வரைபடம்**






**ஆய்வுப்பிரச்சினை**

எந்தவொரு ஆய்வும் பிரச்சினையிலேயே ஆரம்பிக்கிறது. உள்நாட்டு யுத்தத்தில் நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகள் யுத்தம் முடிவடைந்து சுமார் 14 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும்,மக்களின் சாதாரண இயல்பான வாழ்வையும், வாழ்வாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எனவே இவை தொடர்பாக மேலதிக தகவல்களை அறிந்து, அவற்றைக் குறைத்தல், இழிவளவாக்குதல் அல்லது இல்லாமல் செய்யவேண்டிய தேவையுள்ளது

**ஆய்வு நோக்கங்கள்(Research Objectives)**

இவ்வாய்வின் நோக்கங்கள் பொது நோக்கங்கள் (General Objectives)மற்றும் சிறப்பு நோக்கங்கள் (Specific Objectives)என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**A. பொது நோக்கம்**

ஆய்வுப் பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான மக்களின் வாழ்வியல் நிலைமைகளையும், பிரச்சினைகளையும், வாழ்வாதார அபிவிருத்தியையும் வாழ்வாதார அபிவிருத்திக்கு தடையாகவுள்ள அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளையும் கண்டறிதல்

**சிறப்பு நோக்கங்கள்**

- ஆய்வுப்பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் எவ்வாறான நிலையில் காணப்படுகின்றன என்பதையும், அவை குறைவாக இருக்கின்றமையால் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்படுகின்ற தாக்கங்களை இனங்காணல்
- மக்களின் வாழ்வாதார வசதிகள், வேலைவாய்ப்புக்களின் தன்மைகள், வறுமைநிலை என்பனவற்றை கண்டறிதல்

- யுத்தத்திற்க்குப் பின்னர் அதிகரித்துவரும் பிறழ்வுநடத்தைகளுக்கான[1] காரணங்களை கண்டறிதல்

### ஆய்வுக்கருதுகோள் (Research Hypothesis)

ஆய்வுப் பிரச்சினையை இனங்கண்டு அதற்கு பொருத்தமான ஒரு முடிவை தற்காலிகமாக முன்மொழிதல்,தோற்றப்பாடுகளை அறிவியல் அடிப்படையில் விளக்குதல் (நந்தகுமார்.வை,2008:41) கருதுகோள் என்பதற்கிணங்க இவ்வாய்வுக்கு

**உள்நாட்டு யுத்தத்தால் உடல், உள, சமூகப்பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமுதாயப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல்.**என்பது ஆய்வுக் கருதுகோளாக முன்வைக்கப்படுகின்றது.

### ஆய்வு முறைமையியல் (Methodology)

ஆய்வு முறைமையியலானது பண்புரீதியானதும், எண் ரீதியானதும், மற்றும் இரண்டும் இணைந்த கலப்பு (Mixed Methodology) ஆய்வு முறைமையியல் என மூன்று வகைப்படுகின்றது (Sarantakos.S,1998,33).இவ்வாய்வு உய்த்தறிமுறை அணுகுமுறையினைப் பின்பற்றுவதுடன்,ஆய்விற்காக பண்புரீதியிலான தரவுகள் அதிகளவில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் ஆய்வு மாதிரிகள் இவ்வாய்வுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

### ஆய்வு மாதிரிகள் (Sampling)

மாதிரிகள் என்பது தரவு திரட்டுவதற்காக அலகுகளை தெரிவு செய்கின்ற முறை(Sarantakos.s,1998,139). இவ்வாய்வுக்கு நோக்கமாதிரி(Purposive Sampling), பயன்படுத்தப்பட்டது.

### தரவுசேகரிப்பு முறைகள் (Data to be gathered)

ஆய்வு முறைமையியலை அடிப்படையாகக் கொண்டதாகவே தரவுசேகரித்தல், பகுப்பாய்வு முறைகள் தெரிவு செய்யப்படுகின்றது[2]. இந்த ஆய்விற்கான முதன்மைத்தரவுகளுக்காக(Primary Sources), முக்கிய நபர்களை பேட்டிகாணல் (Key Informant Interview), குவிமையக் குழுக்கலந்துரையாடல (Focus Group Discussions), பங்பற்றியதான நேரடி அவதானிப்பு (Participate and Observation)பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளும் (Secondary Sources) பயன்படுத்தப்ப்பட்டுள்ளன.[3]

### தரவுப்பகுப்பாய்வு (Data analysis)

ஆய்வு முடிவை அடைவதற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளை செயன்முறைக்குட்படுத்துவதே தரவுகளின் பகுப்பாய்வாகும் (சின்னத்தம்பி.க, (2007). இச்செயன் முறையின் போது பண்பு சார்ந்த தரவுகள் (qualitative data) பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளினடிப்படையில் பண்புசார் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு விடயம் தொடர்பான விடய விளக்கங்கள், முடிவுகள் கண்டுகொள்ளமுடிந்தது.

---

[1] தற்கொலை, போதைப்பொருள் பாவனை, பாலியல் துஸ்பிரயோகம்

[2] முறைகள் தரவுகளை வகைப்படுத்துவதற்கும் அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்குமான கருவியாக அமைகின்றது(Sarantakos.S, 1993:33).

[3] இவை ஆய்வாளரால் நேரடியாக சேகரிக்கப்படாது ஏனைய தனிநபர்களால் அவர்களின் நோக்கத்திற்காக சேகரித்து வைக்கப்பட்டவைகளாக இருக்கும்( Stephan Moore, 1996, 27).



© 2023, IRJTSR 

**ஆய்வின் முடிவுகள் (Conclusions of the Research)**

சமூகக் கூறுகள்,தோற்றப்பாடுகள், நிகழ்வுகள் என்பவற்றில் ஏற்பட்டிருக்கின்ற இவ்வாறான முரண்பாடுகளின் மூலமாக சமூகப்பிறழ்வான நடத்தைகள் உருவாகி அது பின்னடைவான சமூக நிலைமைகளுக்கும் அதுசார்ந்த சமுதாய மாற்றங்களுக்கும் காரணமாக அமைதுள்ளதுடன்,இச்சமுதாய ஒழுங்கில் சீர்குலைவுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது."சமூகவியல் பகுப்பாய்வில் கோட்பாட்டின் ஒவ்வொரு பகுதியினையும் அது தொடர்பான சிறப்பான ஆய்வுப் பகுதிக்கு வரையறை செய்வதில் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன"(றொபின்சன்.அ, 2006, 12). இவ்வகையிலான இந்நிலைமையானது இம்மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தடையாகவுள்ளது. இவ் அனைத்து விடயங்களையும் ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

இவ்வாய்வின் மூலம் அடிக்கட்டுமான வசதிகளின் நிலைமைகளை அறிந்து கொள்ள முடிந்தது. அதாவது யுத்தம் அதிகம் இடம்பெற்ற பகுதிகளில்,கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர், வீட்டுவசதிகள், மலசலகூட வசதிகள்,குறைவாக காணப்படுவதனையும், வீதி போக்குவரத்துவசதிகள், தொடர்பாடல், தபாலக வசதிகள், குறைவாகவுள்ளமையினையும், சந்தை, மைதானம், தொழிற்சாலைகள், பொதுக்கட்டிடங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் காப்பகங்கள், குறைவாக காணப்படுவதனையும், இனங்கண்டுகொள்ள முடிந்தது.இவையனைத்தும் யுத்தம் முடிவடைந்த காலம்முதல் UN OCHA(2010), Early Recovery in 8 Resettled divisions of Batticaloa and Trincomalee Districts, Outstanding Needs and Activities. இன்றுவரை பல தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளன.UN Definition for Early Recovery, A Multi-Dimensional process that aims to incorporate developmental perspectives in to the relief phase and to more meaningfully and systematically link short-term relief efforts to lasting recovery.

உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான வாழ்வாதார அபிவிருத்தி பற்றி இவ்வாய்வின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது. இப்பகுதிகளில் விவசாயம், மீன்பிடி என்பன பிரதான வாழ்வாதார விடயங்களாக உள்ளனKalinga Tudor Silva, M.G.M Razaak, Dhammika Hearth et al (2018). குறிப்பாக யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களின் மீன்பிடி, விவசாயம் சார் சமுதாய மட்டத்திலான வாழ்வாதார உட்கட்டுமான (Community Based livelihood Infrastructure) அடிப்படைகளான ஆறுகள், குளங்கள், வாவிகள், விவசாய நிலங்கள் போன்றசூழல்சார் புனருத்தாரணம் (Environmental Rehabilitation),முழுமையாக புனரமைத்து அபிவிருத்தி செய்யப்படாத தன்மையினையும், இதனால் நிலைபேண் வாழ்வாதாரம் (Sustainable livelihood),பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளதனையும் அறிந்து கொள்ள முடிந்தது.

அதிகரித்த வறுமைக்கு யுத்தம் ஒரு பிரதான காரணமாகவுள்ளது. துழளநிர Deng Malual (2008), என்பவர் தனது ஆய்வுக் கட்டுரையில்"the wars in developing countries have heavy human, economic and social costs and are a major cause of poverty and underdevelopment என Steward (2002:342),பொருளாதார அடிப்படை வசதிகள், வாழ்வாதாரஇடங்கள், தொழில் நிலைமைகள், மற்றும் அவர்களுக்கு இருக்கக்கூடியதான தொழில் வாய்ப்புக்கள், சீவனோபாயத்தை மீள்கட்டி எழுப்புவதற்கான சந்தர்ப்பங்கள், போன்றன குறைவாக காணப்படுவதனையும்ஆய்வின்மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்ற நாடுகளில் யுத்தமும் அதன் விளைவுகளும் மிகப் பரந்த அளவில் மனித, சமூக, பொருளாதார, தாக்கங்களுக்கும் வறுமை, மற்றும் குறைவான அபிவிருத்திக்கும் பிரதானமான காரணமாக

அமைகின்றன. மேலும், உள்நாட்டு யுத்தத்தில் பாதிப்புக்களுக்கு உட்பட்ட மக்களுக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை செய்வது அம்மக்களின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திக்கு உதவுவதுடன், யுத்தத்தினால் பாதிப்புக்களுக்குட்பட்டு, அழிக்கப்பட்ட வாழ்வாதார அடிப்படை வளங்களை கட்டி எழுப்புவதற்கும் காரணமாக அமையும்.

அது மட்டுமன்றி ஆய்வுப்பிரதேசத்தின் இயற்கை, பொதீக, மனித, நிதி மற்றும் சமூக வளங்கள்(Natural,Physical, Human, Financial and Social Capitals) தொடர்பான தகவல்களை கண்டுகொள்ள முடிந்தது. உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக பாதிக்கபப்பட்ட மக்களின் வாழ்வாதாரமும் அதனை கட்டி எழுப்புவதற்குத் தேவையான உட்கட்டுமான வசதிகளும் அதன் முக்கியத்துவமும் இங்கு அவதானிக்கப்பட்டது UN HABITAT (2015). வளப்பயன்பாட்டின் தன்மைகுறைவாகவுள்ளமையும், வளங்கள் முழுமையாக பயன்னடுத்தாமலிருப்பதனையும், வளப்பயன்பாட்டிற்கான முக்கிய தேவையினையும், அதற்கான் உபாயங்களையும் கண்டுகொள்ள முடிந்தது.

உள்நாட்டு யுத்தத்தின் தாக்கங்களால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் வாழ்வாதாரம் பிரச்சினையாக உள்ளதுடன், இவர்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியும், இலகுவில் பாதிப்புக்களுக்கு உட்படக் கூடியவர்களாகவும் உள்ளனர்Suresh Kanesh and Mumthaj Sameem (2018). இம்மக்கள் பல சமூகப்பிறழ்வான நடத்தைகளை வெளிப்படுத்துவதனை அவதானிக்கமுடிந்தது. குறிப்பாகதற்கொலை, போதைப்பொருள் பாவனை, பாலியல் துஸ்பிரயோகம், களவு, கொலை, கொள்ளை எனபைன யுத்தத்தின் பின் அதகரித்துள்ளதனை ஆய்வின் மூலம் அறியமுடிந்தது.

அத்துடன் யுத்தத்திற்குப் பின்னரான ஆய்வுப்பிரதேச மக்களின் வாழ்வாதார அபிவிருத்திச் செயன்முறைகள், அரச, அரசசார்பற்ற, தனியார் மற்றும் பொது அமைப்புக்களின் பங்களிப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மீளக் கட்டி எழுப்பப்பட்டுள்ள தன்மை, மீளுருவாக்கச் செயற்பாட்டில் காணப்படுகின்ற பின்னடைவுகள் அம்மீளுருவாக்கச் செயற்பாட்டிற்கான சிறந்த வழிமுறைகள், அதில் பங்கேற்கவேண்டிய பங்குதாரர்கள், அவர்களுக்கான கடைமைகள் மற்றும் பொறுப்புக்களையும் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ளமுடிந்தது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் இடம்பெற்று முடிந்த உள்நாட்டு யுத்தத்தில் மக்கள் பலபாதிப்புக்களை எதிர்கொண்டனர். இம்மக்களது எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், விருப்பங்கள், ஆர்வங்கள் மற்றும் அபிலாசைகள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இம்மக்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்கள் பாதிப்படைந்து, உயிர்களை,உறவுகளை, உடலுறுப்புக்களை, உடைமைகளை, சொத்துக்களை இழந்தவர்கள், போராளிகளாக இருந்து தற்போது சமுதாயத்தில் இணைந்தவர்கள், கணவனையிழந்த பெண்கள், உடல், உள, கல்வி, சமூகப்பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமைகள் போன்ற பல பிரச்சினைகள் யுத்தத்தின் பின்னரும் தொடர்கின்றன.Households have to adopt to gradual deteriorating economic trends and to cope with sudden political shock in the form of violence (Korf and Silva 2003). Conflict, economic and political instability, and disasters are often responsible for forced displacement, denial of basic human rights, and deliberate destruction of livelihoods of the people.
வறுமை,தொழிலின்மை,சமுதாய வளர்ச்சி, அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கியமை, குறைவான உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பல காரணங்கள் இம்மக்களை மேலும் பின்தங்கிய நிலைக்குள்ளாக்குகின்றன.

மட்டக்களப்பில் தமிம் முஸ்லிம் சமுதாயத்தினர் யுத்த காலங்களிலும், யுத்தம் முடிவடைந்த காலங்களிலும் பல்வேறு பாதிப்புக்களுக்கும், தாக்கங்களுக்கும் உட்பட்டனர். அதிலும் குறிப்பாக தமிழர் சமுதாயத்தினரே அதிக

பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பெரும்பான்மையை மையமாகக் கொண்ட அரசாங்கங்களினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள் சமூக, அரசியல், பொருளாதார, மற்றும் கலாசார ரீதியாக இன்மைப்படுத்தப்பட்டும், ஓரங்கட்டல்களுக்கு உட்படுத்தப்பட்டும், சமுதாய ரீதியில் பின்தள்ளப்பட்டுமுள்ளனர். இவ்வாறான நிலைமைகளுக்கு அரசியல் ரீதியிலான பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்துள்ளதுடன் தற்போதும் அவ்வாறான நிலைமைகள் தொடர்கின்றன.

பெரும்பான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசாங்கங்கள் சிறுபான்மை இன மக்களைப் பேணிப் பாதுகாப்பதுடன், அம்மக்களை இன, மத, மொழி மற்றும் வர்க்க பேதங்களுக்கப்பால் சமத்துவமாக நடாத்த வேண்டியது ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கங்களின் பொறுப்பும் கடைமையுமாகும். அவ்வாறில்லாமல் பாதிப்புக்களுக்கு உட்பட்ட ஒரு சமுதாயத்தினரை பாரபட்சமாக நடத்துவது அம்மக்களை மேலும் பாதித்து நலிவடையச் செய்வதுடன் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியிலும் பின்தள்ளிவிடும்.

இதனால் யுத்தத்திற்க்குப் பின்னரான ஆய்வுப்பிரதேசத்தின் சமுதாய நிலைமைகள், சமகால வறுமை, வாழ்வாதாரம், அபிவிருத்தி பற்றி காரண காரிய அடிப்படையில் விஞ்ஞான நுட்பங்களின் துணையுடன் அறிந்து, அரசியல், பொருளாதார பிரச்சினைகளை சமுதாய நலன்நோக்கில் தீர்ப்பதற்கான உபாயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### 10.உசாத்துணைகள் (References)

**[1]** அருள்மொழி.செ, (2008),"கல்வி ஆய்வு முறைகள்", எவகிறீன் பிரிண்டர்ஸ்.

[2] சண்முகலிங்கம்.க, (2007) "கூடம்", ஜனவரி-மார்ச்

**[3]** சின்னத்தம்பி.க, (2007),"கல்வி ஆய்வியல்", சேமமடு பதிப்பகம்.

[4] நந்தகுமார்.வை, (2008), "ஆய்வு முறையியலும் நுட்பங்களும்", பேராதனைப் பல்கலைக்கழகம்.

**[5]** றொபின்சன்.அ, (2006),"சமூகவியல் கட்டுரைகள்", பூபாலசிங்கம் புத்தகசாலை.

[6] Kalinga Tudor Silva, M.G.M Razaak, Dhammika Hearth et al (2018) Postwar Livelihood Trends in Northern and Eastern Sri Lanka, ICES.

**[7]** Sarantakos.S, (1993), "Social Research", Macmillan education, Australia Pvt ltd.

**[8]** Suresh Kanesh and Mumthaj Sameem (2018), Post -War Livelihood Development in Batticaloa District, Sri Lanka.

[9] UN OCHA(2010), Early Recovery in 8 Resettled divisions of Batticaloa and Trincomalee Districts, Outstanding Needs and Activities

[10] UN OCHA(2010), Early Recovery in 8 Resettled divisions of Batticaloa and Trincomalee Districts, Outstanding Needs and Activities

[11] UN HABITAT (2015), Improving Accessibility in Remote Villages in Batticaloa, Project for Rehabilitation of Community Infrastructure, Improvement of Livelihoods and Empowerment of women in the Nothern and Eastern Provinces (RCI)

[12] UN HABITAT (2016), Building Environmentally Friendly Community Infrastructure: Multi-Purpose Community Centre, Batticaloa District.

[13] Vasuki Jeyasankar and Savini Ganhewa (2008), Making Ends Meet: Women's Livelihoods in Post-War Sri Lanka, International Centre for Ethnic Studies.